Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 10
இதழ்348
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 13 ஜூல்க: 7 ஞாயிற்றுக்கிழமை [26-1-69]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




கோர்ப்பரேஷன்

# அண்ணுவுக்கு அடிவயிற்றில் சதை வளர்ச்சி

## டாக்டர் மில்லர் நடத்திய பரிசோதனை சத்திரசிகிச்சை

### விரைவில் குணமடைய பிரதமர் வாழ்த்து

சென்னை, ஜன. 25

**தமிழக முதல் அமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான திரு. சி. என். அண்ணுதுரைக்கு மீண்டும் ஏற்பட்டுள்ள நோயின் தன்மையை அறியும் பொருட்டு இன்று பிற்பகலில் அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சிக்கழக மருத்துவ மனையில் பரிசோதனைச் சத்திரசிகிச்சை யொன்று நடைபெற்றது.**

அடிவயிற்றில் சதை வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. இந்த இடத்துக்கு ரேடியோ கதிர் சிகிச்சை அளிக்கப்பட்டது. அண்ணுவின் உடல் நிலைபற்றி அதிகம் கவலைப்படத் தேவையில்லையென அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சென்ற ஆண்டு நியுயோர்க் மெமோரியல் ஆஸ்பத்திரியில் திரு. அண்ணுதுரையின் தொண்டைக் குழாயில் வளர்ந்திருந்த கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றிய அமெரிக்க சத்திரசிகிச்கை நிபுணர் டாக்டர் மில்லர் தான் இன்றும் பரிசோதனைச் சத்திரசிகிச்சையைச் செய்தார். இந்த பரிசோதனை அறுவை சிகிச்சையின் போது டாக்டர் மில்லருக்கு டாக்டர் சதாசிவம், டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உதவியாக இருந்தனர்.

### வேறு இடத்தில் பாதிப்பு இல்லை

பாதிக்கப்பட்ட சிறுஇடத்தில் முதலமைச்சருக்கு ரேடியம் சிகிச்சை அளிக்கப்பட்டது. வேறு எந்த இடமும் இச்சதைவளர்ச்சியினுல் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. மீண்டுமொரு சத்திர சிகிச்சை அவசியமில்லையென்றும், நான்கோ ஐந்தோ நாட்களுக்குப் பிறகு இன்னுமொரு ரேடியம் சிகிச்சை அளிக்கப்படவேண்டுமென்றும் சத்திர சிகிச்சைக்குப்பின்னர் டாக்டர் மில்லர் தெரிவித்தார்.

அமெரிக்காவிலிருந்து வந்த புற்றுநோய் நிபுணரும், சத்திரசிகிச்சை நிபுணரும் மற்றும் பம்பாய் தமிழ்நாடு வைத்திய நிபுணர்களும் செய்த பரிசோதனைகள் அண்ணுவுக்கு மீண்டும் புற்றுநோய் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றியோ அவரைப் பீடித்துள்ள நோயின் தன்மையைப் பற்றியோ அறிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இதன் காரணமாகவே இந்தப் பரிசோதனை அறுவைசிகிச்சை நடைபெற்றது.

### பிரதமர் கவலை

உத்தரபிரதேசம் சென்றிருக்கும் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று காலையில் நிருபர்களிடம் பேசுகையில் தமிழ்நாடு முதல்அமைச்சர் திரு. அண்ணுதுரை மீண்டும்நோய் வாய்ப்பட்டிருப்பது குறித்து கவலைதெரிவித்தார். விரை

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியில்

## வெளிநோயாளர் கஷ்டம் இன்றுடன் நீங்கும்

### எந்நேரமும் சிகிச்சைபெற வசதி

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியில் தினசரி வந்து குவியும் பெருந்திரளான நோயாளர்களின் சங்கடத்தைத் தீர்ப்பதற்கு ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரி. சண்முகநாதன் இன்று முதல் புதிய திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வருகிருர்.

இதுவரை நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை ஒரே ஒரு டாக்டர் மட்டும் கடமையாற்றி மிக ஆபத்தான நிலையிலிருக்கும் நோயாளர்களைக் கவனித்தும், அந்த நோயாளர்களை ஆஸ்பத்திரியில் அனுமதித்தும் கடமையாற்றிவந்தார். இந்தத் திட்டத்தை மாற்றி காலை 7 மணி முதல் மாலை 8 மணி வரை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியில் நோயாளர் சிகிச்சை பெறுவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதியில் காலை 7மணி முதல் 8 மணிவரை ஒருடாக்டரும் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை 8 டாக்டர்களும் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நான்கு டாக்டர்களும் பிற்பகல் மூன்றுமணி முதல் இரவு 8 மணிவரை 8 டாக்டர்களும் கடமையாற்றுவதற்கு இப்போதுஒழுங்கு செய்யப் பட்டிருக்கிறது. இதனுல் வெளிநோயாளர் சிகிச்சைப்பகுதியில் காலை முதல் மாலை வரை நோயாளர் எச்சமயத்திலும் சிகிச்சை பெறுவதற்கும், நோயாளர் 'கியூ' வில்நீண்ட நேரம்காத்துநிற்கவேண்டிய அவசியம் மேற்படமாட்டாதென்றும் வைத்திய அத்தியட்சகர் கருதுகிறார்.

மன்னுரில் பரபரப்பு

## வீட்டு வளவுக்குள் மனித சடலம்

நல்லூர், சனி

குப்பைபோடுவதற்கு கிடங்கு வெட்டப்பட்டபோது, அங்கு மனித சடலமொன்று இருக்கக் காணப்பட்டது. இப்பரபரபூட்டும் சம்பவம் மன்னுரில் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி வீட்டின்பின்புறவளவில் நிகழ்ந்துள்ளது.

இம்மனிதசடலம்பற்றி வீட்டுச் சொந்தக்காரரான மன்னுர் உணவுக்கட்டுப் பாட்டதிகாரி திரு. சண்முகராசா உடனடியாக மன்னுர் பொலிஸ்நிலையத்திற்கு அறிவித்தார். உதவிப்பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. குணவர்த்தனு, இன்ஸ்பெக்டர் மென்டிஸ், மன்னுர் மாஜிஸ்திரேட் ஆகியோர் ஸ்தலத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர். எலும்புக்கோர்வைகளாகக்காணப் பட்ட இச்சடலம் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இது ஒரு கொலைசெய்யப் பட்ட சடலமாயிருக்கலாமென்றும், 5 வருடத்திற்கு முன்னர் இக்கொலை நடைபெற்றிருக்கலாமென்றும் பொலிசார் கருதுகின்றனர். இதுபற்றிய அறிக்கையை யாழ்ப்பாண பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு மன்னுர் பொலிசா அனுப்பிவைப்பர்.

எம். சி. சி. 236-6; இலங்கை 227-7

## இலங்கை கோஷ்டியின் தரமான ஆட்டம்

கொழும்பு, ஞாயிறு

எம். சி. சி. கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட்கோஷ்டிக்குமிடையில்ஒவல் மைதானத்மில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய எம்.சிசி. கோஷ்டி 6 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 236 விட்டங்களைப்பெற்றது. இக்கோஷ்டியில் ஆகக்கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற வீரர் பிலெச்சர் ஆவார், இவர் 47 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார்.

இலங்கைக்கோஷ்டி தமது துடுப்படியை ஆரம்பித்து, இன்றைய ஆட்டம் முடிவடையும்போது 7 விக்கெட்டுகளை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைக்கோஷ்டியின் துடுப்படி வீரர்களாகிய றஞ்சித் பெர்ணண்டோவும், றீட்டும் மிகவும் திறமையாக துடுப்பெடுத்தாடி முறையே 58, 57ஓட்டங்களைப் பெற்றனர் எம். சி. சிக் கோஷ்டியின் 25 ஓவர் முடிவடையும் போது ஆக 76 ஓட்டங்களைப்பெற்றது. ஆனுல்எமது இலங்கைக்கோஷ்டி தமது 25 ஓவர்வரை துடுப்பெடுத்தாடி 108 ஓட்டங்களைப் பெற்றது,

சர்வதேச டெஸ்ட் கிரிகெட் போட்டிகளிலும் இனி கலந்துகொள்ளலாம் என்பதற்கிணங்க, இன்று இலங்கைக் கோஷ்டியினரின் ஆட்டம் மிகச் சிறப்பாகவும் தரமாகவும்இருந்தது.

(தே. நி.)

## "ஆத்மீகத்துடன் இணைந்தவிஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சி தேவை"

### கைத்தொழிற் பொருட்காட்சி திறப்பு விழாவில் பிரதமர்

கொழும்பு' சனி

"விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஆத்மீக எண்ணத்துடன் செயல்படவேண்டும்" என்று இன்று ராமகிருஷ்ணமிஷனில் ஆரம்பமாகிய இந்திய கைத்தொழிற் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய பிரதமர் டட்லி சேனநாயக்க குறிப்பிட்டார்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: "2500 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து புத்த தர்மம் இலங்கைக்கு வந்தது. பின்னர் மகாத்மா காந்தியின் அஹிம்சைநெறி

(8-ம் பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்
**ஸ்ரீ காலிங்கன்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
**நான் யார் தெரியுமா?**

**MANOHARA**
**JAFFNA**
Daily at 4-45,
7-00, & 9-45 p. m.
Bobcummings -Margaret Lee
in
**FIVE GOLDEN DRAGONS**
(color-scope)

மானிப்பாய்
**வெ ஸ் லி சி னி மா**
தினசரி 3 காட்சிகள் மாலை 2-30, 6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
மற்றும் பலர் நடித்த
**பொன்னான வாழ்வு**
யாழ் நகரில் திரையிடப்படாத புத்தம் புதிய வெளியீடு!

2-வது வாரம்
கிங்ஸ்லி ராஜ் (நீர்கொழும்பு)
பிளாஸா விஜயா (மட்டுநகர்)
மக்கள்திலகம் எம்.ஜி.ஆர் ★ நடிகையர்திலகம் சாவித்திரி
எம். ஆர். ராதா, நாகேஷ்,
மற்றும் பலர் நடித்த
கௌரி பிக்சர்ஸ்
**ப ரி சு**
டைரக்ஷன் யோகானந்
இசை கே. வி. மகாதேவன்

**வெலிங்டன்** யாழ் நகர்
தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு
எஸ். எஸ். ஆர், தேவிகா
நடித்த
மு. கருணாநிதியின்
**மறக்க முடியுமா!**
(சிலதினங்களுக்கு மட்டும்)

30-ம் திகதி முதல்
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த
**அலிபாபாவும் 40 திருடர்களும்**

# வரி விளம்பரம்

நம்பிக்கையான மலையாள மாயாஜால வசீகர பரிகாரத்தைக்கொண்டு காதல் பிரச்னைகள் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். இருவர் பெயர்களையும் எழுத. இலவச விபரங்களுக்கு எழுதுங்கள். நீலன் கந்தசாமி, குபத வித்யாதணய, நிட்டம்புவ, 495

## தவறிவிட்டது

சின்னத்தம்பி என்ற பெயர் கொண்ட இன்சூரன்ஸ் உறுதிகள், பிறப்புப் பத்திரங்கள், காணிக் கந்தோர் பதிவுப்பத்திரம், பிஸ்கால் பத்திரங்களும் வேறு பத்திரங்களும் கொண்ட ஒரு பைல் (File) கந்தர்மடத்திலுள்ள அடைவுகடையில் மாறுப்பட்டுவிட்டது. மேற்படி பைலை எடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 513

2-வது வாரம்!
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
மற்றும் பலர் நடித்த
**ஒளி விளக்கு**
(ஈஸ்ட்மென் கலர்)
(எஸ். ரி. ஆர். வெளியீடு)

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**என் தம்பி**

## விற்பனைக்கு

ட்ராக்டர்

நல்ல நிலையிலுள்ள 25 சிறி 321 இலக்க போட்சன் டெக்சா (Fordson Dexta) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு K. இராமநாதன் வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை. 512

காணி:

யாழ்ப்பாணம், பலாலி வீதியில், திருநெல்வேலியில், பரமேஸ்வராக்கல்லூரிக்குக் கிழக்குப்பக்கமாக மூன்று பரப்புக்கு மேற்படத்துள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ச. பொன்னையா ஆசிரியர், இராணி இல்லம், சங்கத்தானை, சாவகச்சேரி.. 625

## தேவை

காங்கேசன்துறை ப. நோ. கூ. சங்கத்திற்கு ஒரு முகாமையாளர் தேவை. விண்ணப்பங்கள் 6-2-69 முன் கௌரவ காரியதரிசிக்கு அனுப்ப வேண்டும். விபரம் சங்கத்திலும், உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் பார்வையிடலாம். சு. பூதப்பிள்ளை, கௌரவ காரியதரிசி. 627

## கல்வி

1969 டிசெம்பர் ஜீ. சீ. ஈ. (ஓ. எல்.) பரீட்சைக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் தூயகணிதத்திலும் ஆங்கிலத்திலும் டியூஷன் கொடுக்கப்படும். ஜனவரி 31க்கு முன் விண்ணப்பிக்கவும். விலாசம் V. மயில்வாகனம், 199, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். வகுப்புகள் 3-2-69இல் ஆரம்பமாகும். 626

## திருடினார்கள் ஒரு மாதம் சிறை

வல்வெட்டித்துறை, சனி அல்வாய் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம். சின்னையாநடராசா ஆகிய இருவரும் வதிரியைச் சேர்ந்த ஆழ்வார் கணபதிப்பிள்ளைக்கு சொந்தமான பசுமாட்டை களவாடியதாக பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு தலா ஒரு மாதக் கடூழியச் சிறைத் தண்டனையும் தலா ரூபா 100 அபராதமும்விதித்தார். அபராதம் கட்டத்தவறின் மேலும் நான்கு வாரச் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு தீர்ப்பளித்தார்.

### அரசாங்கக் கேள்விகள்

நீர்ப்பாசனத் திணைக்களம் என். 3636- நீர்ப்பாசன இலாகாவின் வவுனியா உப பிரிவிலுள்ள கொத்தன் குள வெட்டு வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு 24-1-69 இலங்கை அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும். GP 1427

## வாடகைக்கு

வீடு:

யாழ்ப்பாணம் மாட்டீன் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு 13 மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்ளவும். 624

**நீங்களும் அதிர்ஷ்டசாலிகளா!**
**சித்ராலயா ஸ்ருடியோ**
ஸ்தாபனத்தாரின் பரிசு விபரங்கள் பின் வருமாறு:
புகைப்பட இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 14896 | 15755 | 14755 | 16919 | 16963 |
| 14769 | 15264 | 15888 | 15253 | 15729 |
| 14863 | 16745 | 15898 | 14690 | 16808 |
| 16965 | 16721 | 15503 | 15179 | 16827 |
| 16744 | 15813 | 16750 | 15155 | 15271 |

அரைச்சலாரில் எடுத்த புகைப்படங்களின் பின்பக்கத்திலுள்ள இலக்கங்களைக் கவனித்து பரிசுக்குரியவர்கள் 10-2-69-க்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம், 781



எம். ஜி. ஆர். இதுவரை நடித்துமுடித்த 100 படங்களிலும் முதற்றரமானதும் தென்னாட்டில் அதிக வசூலைப் பெற்று பெருஞ் சாதனையை உண்டாக்கியதும், தனக்குப் பிடித்தமானபடமும் "குடியிருந்த கோயில்" என்பது எம். ஜி. ஆரின் தீர்ப்பு.
**வின்ஸர் - றீகல்**
ஆகிய இரு திரைகளிலும்
**இப்பொழுது நடைபெறுகிறது**
**தினசரி 4 காட்சிகள்**
வின்ஸர் காட்சி நேரங்கள்! காலை 10-00, பிற்பகல் 2-00, 6-00, 9-00.
றீகல் காட்சி நேரங்கள்: காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-30.
★ எம். ஜி. ஆர். (இருவேடங்களில்) ★ ஜெயலலிதா
நாகேஷ், நம்பியார், ராஜஸ்ரீ நடித்த
G. N. வேலுமணி அளிக்கும்
**குடியிருந்த கோயில்**
(ஈஸ்ட்மென் கலர்)
டைரக்ஷன்: K. சங்கர்
கதை வசனம்: 'சொர்ணம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பாகிஸ்தானில் பொலிஸ் சுட்டதில் ஏழுபேர் மாண்டனர்; பலர்காயம்

## கராச்சியில் மாணவர் பலர் கைது; மூவர் ஆஸ்பத்திரியில்

### டாக்காவில் 24 மணி ஊரடங்கு அமுல்

டாக்கா, ஜன. 25

**கிழக்குப்பாகிஸ்தான் தலைநகரான டாக்காவில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி வன்முறைச் செயல்களாக மாறியதைத் தொடர்ந்து நிலைமையைச்சமாளிப்பதற்காக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஏழுபேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர் நேற்றைய சம்பவங்களைத் தொடர்ந்து டாக்காவில் 24 மணி நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இராணுவம் நகரவீதிகளில் ரோந்து சுற்றி வருகிறது. ஊரடங்கு உத்தரவை மீறி வெளியே நடமாடுவோர் சுட்டுக்கொல்லப்படுவர் என்று கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் எச்சரிக்கை விடுத்திருக்கிறர்.**

ஜனநாயக அரசியல் முறையை ஏற்படுத்த வேண்டுமெனவும் கைது செய்து சிறையில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல்தலைவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும் கோரி பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் நடைபெற்றுவரும் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்களில் ஒன்ருக சென்ற சில தினங்களாககிழக்குப்பாகிஸ்தானில் மாணவர்களும் மற்றும் பலரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் கிளர்ச்சிகளையும் நடத்திவருகின்றனர்.

நேற்று டாக்காவிலும். சிட்டகாங், மைமன்சிங்நகரங்களிலும்ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீச்சு, தீவைத்தல் ஆகியவைகளில் இறங்கினர். பொலிசார் மீது ஆர்ப்பாட்டக்காரர் கல்வீசியதுடன் கிழக்கு பாகிஸ்தான் அரசாங்கசெயலகத்துக்கும் கற்கள் வீசியும் கட்டடத்துக்குத்தீவைக்கவும் முயன்றனர். டாக்காவிலுள்ள இரண்டு தினசரிப் பத்திரிகைகளின் கட்டிடங்களுக்குள் நுழைந்து சேதப்படுத்தியதுடன் பத்திரிகை காரியாலயங்களுக்குத் தீவைக்கவும் முயன்றனர். நிலைமையைக்கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் முதலில் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்தனர். ஆர்ப்பாட்டக்காரர் மீண்டும் வன்செயல்களில் ஈடுபடவே பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் இருவர் மாண்டனர். பத்துப்பேர் காயமடைந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் நடந்த சிறிது நேரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் மீண்டும் அரசாங்க செயலகத்துக்கு முன் திரண்டு பொலிசாரையும் அரசாங்கசெயலகத்தையும் கற்களால் தாக்கத் தொடங்கினர். மீண்டும் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இரண்டாவது துப்பாக்கிப்பிரயோகத்திலும் இருவர்கொல்லப்பட்டனர். பலர்காயமடைந்தனர்.

சிட்டகாங்கில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில்இருவர்கொல்லப்பட்டனர்; மைமன்சிங்நகரில ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். இத்துப்பாக்கிப் பிரயோகங்களில் பலர் காயமடைந்தனர்.

தேசவிரோத சக்திகளுக்கு இடம் கொடுக்காமல் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி அமைதியைப் பாதுகாக்க அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறும் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோருக்கு இடமளிக்கப்படமாட்டாதென்றும் கிழக்குப் பாகிஸ்தான்கவர்னர்நேற்று வானெலி மூலம் எச்சரிக்கை விடுத்தார்.

### அமெரிக்க விமானம் கியூபா திருப்பியது

புளோரிடா, ஜன. 25

புளோரிடாவிலிருந்து மியாமிக்குப் புறப்பட்ட பிரயாணிகள் விமானமொன்று கியூபாவுக்குத் திசை திருப்பிக்கொண்டு செல்லப்பட்டது.

46 பிரயாணிகளுடன் 4 விமானிகளுடனும் புளோரிடாவிலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் விமானத்தைச் செலுத்திக்கொண்டிருந்த விமானியின் பின்னல் ஒருவன் கத்தியை வைத்துப் பயமுறுத்தி விமானத்தைக் கியூபாவுக்குத் திருப்பச் செய்ததாக கூறப்படுகிறது.

### மீண்டும் நியமனம்

புத்தூர், சனி

புத்தூரைச் சேர்ந்த வழக்கறிஞர் சா. லோகீஸ்வரன் யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகக்குழுவுக்கு ஒரு அங்கத்தவராக சுகாதார அமைச்சரால் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கராச்சியில் மாணவர் மீது தடியடி

கிழக்குப் பாகிஸ்தானில் நடந்த துப்பாக்கிப்பிரயோகத்தில் மாண்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து கராச்சியில் நேற்று மாலை மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம்நடத்தினர். மாணவர்களின் ஊர்வலம் ஆரம்பமாக மசூதிக்கு அருகில்வந்தபோது பொலிசார் அவர்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டதாகவும் மாணவர்கள் பொலிசார் மீது கல் வீசித் தாக்க முயன்றதாகவும் பொலிசாருக்கும்மாணவருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்ததாகவும் நிலைமை கட்டுக்கடங்காததால் பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்ததாகவும் பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தடியடிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த மூன்றுமாணவர்கள் கராச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நூற்றுக்கதிகமான மாணவர் சிறு காயங்களுக்காக ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சையளிக்கப்பட்டனர். சுமார் நூறு மாணவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கராச்சியில் இப்போது 144-வது தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வீதிகளில் கூடிநிற்பதற்கும், ஊர்வலங்கள் கூட்டங்களுக்கும்இந்தஉத்தரவுதடைவிதிக்கிறது.

ராவல்பிண்டி, பெஷாவர் மற்றும் பல மேற்குப்பாகிஸ்தான் நகரங்கள் பலவற்றிலும் மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்.

பொலிஸ் துப்பாக்கிப்பிரயோக சம்பவங்கள், மாணவர் மீது தடியடிப்பிரயோகம் ஆகியவை பற்றி ஆராய்வதற்காக ஜனநாயக செயற்குழு கராச்சியில் இன்று கூடுகிறது.

''மக்களின் எழுச்சியை துப்பாக்கிக் குண்டுகளாலேயோ, அடக்கு முறைச் செயல்களாலேயோ, அடக்கிவிடமுடியாதென'' அஷ்கர் கான் தெரிவித்தார்.

## ஸ்பெயினில் அவசரகால நிலை பிரகடனம்

மாட்ரிட், ஜன. 25

ஸ்பெயின் முழுவதிலும் மூன்று மாதகாலத்துக்கு அவசரகால நிலையை ஜெனரல் பிராங்கோவின் அரசாங்கம் பிறப்பித்திருக்கிறது.

உள்நாட்டுச் சண்டை நடந்த முப்பது வருடங்களின் பின் இப்போதுதான் அங்கு முதல் தடவையாக அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகைத் தணிக்கை அமுலுக்குவந்துள்ளது. தலைநகரிலுள்ள பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கிறது. மாணவர் கிளர்ச்சியும் மற்றும் நாட்டின் அமைதிக்குப்பாதகமான செயல்களில் சிலர் ஈடுபடுவதற்கான திட்டங்களும்தான் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்வதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

### சீனவை இத்தாலி அங்கீகரித்தது

ரோம், ஜன. 25

கம்யூனிஸ்ட் சீன அரசாங்கத்தை அங்கீகரிப்பதென இத்தாலிய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இனி இரண்டு நாடுகளும் ராஜீய உறவுகளை விரைவில் ஏற்படுத்திக்கொள்ளும்.

### தூதர் ராஜினமாவும் அரசியல் தஞ்சமும்

ஒல்லாந்தில் கம்யூனிஸ்ட் சீன தூதுவராகக் கடமையாற்றிவந்தவர் தமது பதவியை ராஜினமாச்செய்திருப்பதுடன் ஒல்லாந்தில் தொடர்ந்து வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்து ஒல்லாந்து அரசாங்கத்திடம் அரசியல்தஞ்சம் கோரியிருக்கிறர்.


லங்காலோஹ

இலங்கைத் தயாரிப்பு உலோகப் பொருள்கள்

சிறந்த ரகம், நம்பிக்கை, நீடியகால பாவனைக்கு

லங்காலோஹ மண்வெட்டிகள்

அளவு 8'x10''—சில்லறை விலை ரூ. 8-25 ஒன்று
அளவு 7'x10''—சில்லறை விலை ரூ. 7-50 ஒன்று

யாழ்ப்பாண மோஸ்தர் மண்வெட்டி

உயர்ந்த உறுதி வாய்ந்த உலோகம்

நிறை 4 இருத்தல்



சில்லறை

ஒன்றுக்கு

ரூ. 14-00

இலங்கை அரசாங்க உலோகப்பொருட் கூட்டுத்தாபனம்

242, ஹவலக் ரோட், கொழும்பு 5


### இந்திய ஜனதிபதி வழங்கிய

# லட்சம் ரூபாய் பரிசை திருமதி கிங் பெற்றர்

## விடுதலைப் போராட்டத்தில் உயிரைத் தியாகம் செய்த வீரர் எனப்பாராட்டு

புதுடில்லி, ஜன. 25

''புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் விடுதலைக்காக தன் உயிரை அர்ப்பணித்துப் போராடினர் மறைந்த விடுதலை வீரர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங். மகாத்மாகாந்தியின் பாதையில் அடியெடுத்து வைத்து, இன்னல்களைக் களைந்தெறிய அகிம்சையையும், அன்பையும் முன்வைத்துப் போராடினர் கிங்'' என்று இந்திய ஜனதிபதி டாக்டர் ஸாகீர் ஹுசையின். இன்று காலை புதுடில்லியில் நடைபெற்ற ஜவாஹர்லால் நேரு விருது வழங்கும் வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

காலஞ்சென்ற அமெரிக்க நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங்குக்கான ஜவர்ஹர்லால்நேரு விருதை அவருடைய மனைவியான திருமதி கிங்குக்கு ஜனதிபதி வழங்கினர். இந்தப் பரிசு 1 லட்சம் ரூபாயாகும்.

ஜனதிபதி டாக்டர் ஹுசையின் மேலும் பேசுகையில், 'கணவரின் லட்சியப் பாதைக்கு துணையாகவும், வெல்லும் ஒரு சக்தியாகவும் இருந்து தொண்டாற்றினர் திருமதி கிங். அவருடைய சேவை மகத்தானது' என்று பாராட்டினர்.

பிரதமர் திருமதி இந்திராகாந்தி பேசுகையில், பாரதத்தின் சுதந்திரத்துக்காக மகாத்மாகாந்தி எப்படி தன்னைத் தியாகம் செய்தாரோ அதேபோன்றே டாக்டர் கிங்கும் தாழ்த்தப்பட்ட ஒரு இனத்தின் விடுதலைக்காக தன்னைத் தியாகம் செய்தார். இரு பெரும் தலைவர்களும் தமது முடிவை நன்ருகத் தெரிந்து வைத்திருந்தார்கள் என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இறைவனிடம் நம்மை சரணடைய வைப்பதை விட வேறு நிம்மதியை எங்கிருந்தும் பெறமுடியாது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 13-ந் திகதி
(26-1-69)


## இந்திய குடியரசும் இலங்கையும்

இந்திய நாடு குடியரசாகி இன்றுடன் பத்தொன்பதாண்டுகளாகின்றன. பல்லாண்டுகால அன்னியராட்சியிலிருந்து இந்தியத் தாயை விடுதலை செய்வதற்கு, அந்நாட்டு மக்கள் பெரும் போராட்டங்கள் நடத்தி அரும் பெரும் தியாகங்கள் செய்து வெற்றிபெற்றனர். இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டமும் தியாகமும் இந்தியாவுக்கு மட்டுமல்லாது இலங்கை உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்கும் விடுதலை பெற்றுக்கொடுத்தது. இந்தியாவைப் போலவே புதிதாக அரசியல் சுதந்திரம்பெற்ற இலங்கை மற்றும்நாடுகளும் பொருளாதார விடுதலைக்காக பெரும் முயற்சிசெய்து வருகின்றன. இந்த முயற்சியில் இந்த நாடுகள் தனித்தனியாக ஈடுபடுவதைவிட இந்த நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் முயற்சி அதிக பயனைக் கொடுக்கும். இதை ஆசிய நாடுகள் பலவும் உணர்ந்து வருகின்றன. இந்தியாவும் இலங்கையும் பொருளாதார சுதந்திரத்துக்கான ஒத்துழைப்புக்கு வழிகாட்டும் என்று நம்பலாம்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பல்லாண்டுகளாக நெருங்கிய கலாசார, பொருளாதார உறவு இருந்து வந்திருக்கிறது. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னை சம்பந்தமாகவும் இருநாடுகளிலுமுள்ள தீவிர அரசியல் வாதிகளின் போக்கு காரணமாகவும் இந்த நல்லுறவுக்குப் பங்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டபோதிலும் இப்பிரச்னைகளுக்கு ஓரளவு நியாயமான தீர்வு காண்பதற்கான வழியை இருநாட்டுத் தலைவர்களும் விவேகத்துடன் வகுத்துக்கொடுத்திருப்பதன் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நல்லெண்ணமும் நல்லுறவும் கலாசார வர்த்தக உறவும் வலுப்பெறுவதற்கு வாய்ப்பேற்பட்டிருக்கிறது. இப்பொழுது இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நெருங்கிய வர்த்தக ஒத்துழைப்பு சம்பந்தமாக மந்திரிகள் கூட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தப் பேச்சுவார்த்தைகள் நல்லமுறையில் முடிவடைந்து இரு நாடுகளும் பயனடையக்கூடியதற்கான மார்க்கம் ஏற்படுமென எதிர்பார்க்கலாம்.

இந்தியா பெரிய தேசம். அங்கு பல கஷ்ட நஷ்டங்கள் பிரச்னைகள் இருப்பினும் குடிசைக் கைத்தொழில், சிறுகைத்தொழில், கனரகத்தொழில், விவசாயம் ஆகிய பல துறைகளிலும் பெருமளவு முன்னேற்றம் பெற்றிருக்கிறது. இலங்கை உட்பட ஆசியநாடுகளின் சுதந்திரமும், முன்னேற்றமும் பாதுகாப்பும் கூட இந்தியாவிலேயே ஓரளவு தங்கியிருக்கிறதென்று சொல்லலாம்.

ஆசிய நாடுகளுக்கிடையில் நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பும் கூட்டுப்பாதுகாப்பும் ஏற்பட வேண்டுமென்ற உணர்வு ஆசியநாடுகளுக்கிடையில் அதிகரித்துவரும் இச் சமயத்தில் இலங்கையும் இந்தியாவும் இதற்கு வழிகாட்ட வேண்டும்.

## இப்பகுதிக்கும் வரட்டும்

பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்களான இங்கிலாந்து எம்.ஸி.ஸி. கோஷ்டியினர் இப்பொழுது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கின்றனர். கொழும்பிலும் கண்டியிலும் அவர்கள் இலங்கை கிரிக்கெட் கோஷ்டியுடன் கிரிக்கெட்ஆடவிருக்கின்றனர். நேற்று முதல் ஆட்டம் கொழும்பில் நடைபெற்றது. பெருந்திரளான கிரிக்கெட் விளையாட்டுப் பிரியர்கள் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கொழும்புக்குச் சென்று பல சிரமங்களுக்கிடையிலும் ஆட்டத்தைக் கண்டுகளித்திருக்கின்றனர். இங்கு வருகைதந்து இலங்கை கிரிக்கட் ஆட்ட வீரர்களின் திறமையை அறிந்து அளவிடவும் தங்கள் ஆட்டத்தை இலங்கை ரசிகர்கள் கண்டுகளிக்கவும் வாய்ப்பளித்த எம். ஸி. ஸி. கோஷ்டியினருக்கு இலங்கை ரசிகர்களுடன் சேர்ந்து நாமும் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொழும்பிலும் கண்டியிலும் அல்லாது வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் கிரிக்கெட் விளையாட்டுப் பிரியர்களும் ரசிகர்களும் நிறைய இருக்கின்றனர். வடக்கு, கிழக்கு மாகாண மக்களும் இந்தவிளையாட்டைக் கண்டுகளிக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்திருந்தால் பலரது பாராட்டையும் வாழ்த்தையும் இதற்கான ஒழுங்குகளைச் செய்தவர்களும் விளையாட்டுத்துறை அமைச்சினரும் பெற்றிருப்பர். ஆனாலும்இதற்காக அவர்களை மட்டும் குறைசொல்வதற்கில்லை.

கொழும்பில் 'ஓவல்' மைதானம் போன்றோ, அதைவிட சிறிது வசதி குறைவான கண்டி விளையாட்டு மைதானம் போன்றோகூட வடக்கு,கிழக்கு மாகாணங்களில் இத்தகைய பெரிய விளையாட்டுகள் நடைபெறக்கூடிய விளையாட்டுமைதான வசதி இல்லை. யாழ்.நகரில் அமைக்கப்பட்டு அரைகுறையிலுள்ள விளையாட்டு அரங்கை விஸ்தரித்து சிறந்த விளையாட்டு மைதானமாக்கியபின் இத்தகையவிளையாட்டுகளுக்கு ஒழுங்கு செய்யப்படவில்லையென்றால் யார்மீது குறைசொல்லமுடியும்.

சில தினங்களுக்குமுன் கொழும்பில் சென்னை நீச்சல்வீரமணிகள் வந்து நீச்சல் சாகஸங்கள் காட்டிப் பலரையும் மகிழ்வித்தனர். அந்தக் காட்சியைக் கண்டுகளிக்கும்வாய்ப்பு கொழும்புவாழ் மக்களைத்தவிர வேறு எந்தப்பகுதி மக்களுக்கும் கிடைக்கவில்லை.

வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள், வீரமணிகள் இலங்கைக்கு வரும்போது அந்த வாய்ப்பு வடபகுதி மக்களுக்கும் கிடைக்கவேண்டுமானால், அதற்கான வசதிகள் இப்பகுதிகளில் இருக்கவேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண மாநகர சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தங்களுக்கிடையில் உள்ள பதவிப்போட்டிகளை ஒதுக்கிவைத்துவிட்டு இதற்கான துரிதகாலத் திட்டம் வகுத்து செயல்படுத்த முன்வர வேண்டும்; செய்வார்களா?

### அரிசி ஆராய்ச்சி நிலையம்

பம்பலப்பிட்டி, சனி

இலங்கையில் வெகு விரைவில் அரிசி ஆராய்ச்சி நிலையம் ஒன்று நிறுவப்படவிருக்கிறது. உணவு விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா அரிசி ஆராய்ச்சி நிலையத்தின் அவசியத்தை பற்றி மந்திரிசபையில் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரதமரைத் தலைவராகக் கொண்ட மந்திரிசபைத் திட்ட உபகுழு, அரிசி ஆராய்ச்சி நிலையத்தை நிறுவ அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையம் நெற்செய்கை பற்றியும் நெல் உற்பத்தி பற்றியும் ஆராய்ச்சிகள் நடாத்தும். இந்த ஆராய்ச்சி நிலையம் வெளிநாட்டு நிதி, தொழில்நுட்ப உதவிகளோடு நிறுவப்படும்.

### புதிய நிர்வாகிகள்

உடும்பராய், சனி

யாழ்ப்பாண மாநகரசபையின் 18-ம் வட்டார உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட திரு. க. வீ. தெய்வேந்திரனைப் பாராட்டி ஓர் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் வருகிற மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவிருக்கிறது. இவ் ஏற்பாட்டை 18-ம் வட்டாரத்துக்குட்பட்ட முன்னேற்றக் கழகம் ஒழுங்குசெய்துள்ளது.

அக் கழகத்தின் புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு: தலைவர்: திரு. சி. எம். செல்லப்பா, காரியதரிசி: திரு. சோ. ஜீவரட்ணம், தனாதிகாரி; திரு. எஸ். கந்தசாமி. 10 பேர்கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

0 0 0

அல்லைப்பிட்டி, சனி

வேலணை கிழக்கு தேவி கோட்டம் ஜனசமூக நிலைய நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வி. சிவம், உபதலைவர்: என் ஜெகநாதன், காரியதரிசி: பி. முத்துலிங்கம், பொருளாளர்: எஸ். சண்முகரத்தினம். ஏ. செல்லத்துரை, எம். இரத்தினம், கே. சண்முகலிங்கம், எஸ். ஸ்ரீஸ்கந்தராசா, எஸ். சிவசுந்தரம், எஸ். நடராசா ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர்.

0 0

அரியாலை காந்தி ஜனசமூக நிலைய நடப்புவருட உத்தியோகஸ்தர் வருமாறு:

தலைவர்: சு. ஆறுமுகம், உபதலைவர் நா. பரமசாமி, காரியதரிசி: வே. அரியரத்தினம், உப காரியதரிசி: ச. குணரத்தினம், தனாதிகாரி: க. தில்லையம்பலம், பத்து பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

நாவற்குழி, சனி

நாவற்குழி மகாவித்தியாலய இந்து மாணவர் மன்றத்தின் புதிய நிர்வாகிகளாக தலைவர்: ஆசிரியர் இ. சொக்கலிங்கம், காரிதரிசி; க. மகேந்திரராசா, தனாதிகாரி: க. சிவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### கைப்பற்றினர்

இமையாணன். சனி

வல்வெட்டித்துறையில் 1967-ம் ஆண்டில் களவு போனதாகக் கருதப் படும் ஒரு சைக்கிளை வல்வெட்டித்துறைப் பொலிசார் சென்ற திங்களன்று மாலை கைப்பற்றினர். இந்தச்சைக்கிள் வல்வெட்டித்துறையில் ஒருவரிடமிருந்து வல்வெட்டித்துறை பொலிசைச் சேர்ந்த வி. ஜி. ரணவீராவும், எம். ஏ. சதார்தீனும் கைப்பற்றினர். சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

# பாரதத்துக்கு பலப்பட்டு வ

## வெள்ளப்பெருக்கை தடுக்க வெற்றிகரமான திட்டங்கள்

### சேதப்படுத்துவதை செம்மைப்படுத்த பாரதம் எடுத்துவரும் முயற்சிகள்

நீர், மின்சாரம் கிராம அபிவிருத்திக்குப் பெரும் உதவியளிப்பதாக விவசாயத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றம் தெரியப்படுத்தியுள்ளது. இதே நேரத்தில் இவ்வருடத்தில் ஏற்பட்டது போன்ற வெள்ளப் பெருக்குகள், பொருளாதார அபிவிருத்தி தடையின்றித் தொடர்பாக நடைபெறத் துரிதமான வெள்ளப் பெருக்குப் பாதுகாப்பு வேலைகளையும் வற்புறுத்தியுள்ளன.

1948-ம் ஆண்டு தாமோதர பள்ளத்தாக்குக் கூட்டுறவு நிறுவப்பட்டதிலிருந்து இந்தியாவின் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி புகழ்பெற்றதொன்றாகும். இதற்கு முன்னைய பழைய சரித்திரகாலத் திட்டங்களின் நோக்கம் நாட்டின் உள்ளூர் நீர்ப்பாசனத் தேவைகளைப் பூர்த்திசெய்வதாகும். அதாவது பயிர்கள் அழிந்து போகாமல் பாதுகாக்க இத்திட்டங்கள் பயன்பட்டன.

இந்தியா சுதந்திரமடைவதற்கு முந்திய காலம் சில பலநோக்குத்திட்டங்களையுடைய காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியில் மகாராஷ்டிரா காடகவஸ்லா அணை, மைசூர் கிருஷ்ண ராஜசாகர் அணை, சென்னை மேட்டூர் அணை போன்றவைகள் நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றின் பொருட்டுக்கட்டுப்பட்டன. இத்திட்டங்கள் முன்னைய நீர்ப்பாசனம் ஒன்றையே கருத்தாகக்கொண்ட தனியொரு அம்சத் திட்டங்களிலும் பார்க்க ஒருபடி முன்னேற்றமடைந்தனவாகும்.

943-ல் தாமோதர் பள்ளத்தாக்கில் உண்டான வெள்ளப்பெருக்குக் காரணமாகக் கடும் பஞ்சம் வங்காளத்தில் ஏற்பட்டபொழுது ஒரு புதிய திருப்பம் உண்டானது. தாமோதர் பள்ளத்தாக்கில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பெருக்கை முதலில் கட்டுப்படுத்துவது பற்றி கேள்வி எழுந்தது. தாமோதர் வெள்ளப்பெருக்கு விசாரணைக்குழு இவ் வெள்ளப்பெருக்கு பிரச்னையை ஆராய்ந்து தற்காலிக நடவடிக்கைகள் பெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்த எடுக்கப்படவேண்டுமென்ற நோக்கத்தைத் தடுத்து விரிவான நிரந்தர பள்ளத்தாக்கு அபிவிருத்தித்திட்டத்தை முழுப்பள்ளத்தாக்குக்கும் ரெனிசி பள்ளத்தாக்குத் திட்டத்தைப் பின்பற்றி அந்த வழியில் நடைபெறவேண்டுமெனச் சிபார்சு செய்தது.

தாமோதர் நதியின் பிரதான கிளையாறுகளை மறித்து அணைகள் கட்டப்பட்டுள்ளதால் கொந்தளிக்கும் தாமோதர் நீரும் மேலதிக பருவப் பெயர்ச்சி மழை நீரும் இவ்வணைக்கட்டுகளுக்குள்ளால் தடுக்கப்பட்டுத் தேக்கப்படுகின்றமை இதனால் இன்று பிரதான கால்வாய்க்குள் வெகு விரைவாகப் பாயும் நீரின் அளவு குறைய ஏதுவாகிறது. இவ்வாறு தடுக்கப்படாதுவிடின் உண்மையில் இந்நீரே வெகு விரைவாகப் பாய்ந்து பள்ளத்தாக்கின் கழிமுகப்பகுதியில் அழிவையுண்டுபண்ணும் வெள்ளப் பெருக்குக்குக் காரணமாயிருந்தது.

ஒவ்வொரு அணைக்கட்டுப்பிலும் தேக்கிவைக்கக பட்ட நீர் பின்னர் திட்டமிட்ட வசதியான இடைவேளைகளில் பிரதான நதி வாயிலாக வெளியே பாய்ச்சப்படுகிறது. இந்த நடவடிக்கைகளின் மூலமே நீர்ப்பாசனமும் நன்மையடைந்துள்ளது. பிரதான நதி வாயிலாகப் பாய்ச்சப்படும் நீர் சிறு அணைக்கட்டு வாயிலாக பள்ளத்தாக்கின் கீழ்ப்பகுதி நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சுகிறது. இதுமாத்திரமன்றி நீர் தேக்கங்களின் உயர்ந்த இடங்களில் மின்வலு உற்பத்தி செய்வதோடு ஆற்றுக் கால்வாய்களிலும், வாய்க் கால்களிலும் நீர் ஆழமும் பாதுகாக்கப்படுகிறது.

இவைகளே இப்பள்ளத்தாக்கிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள மக்கள் அடைந்த நன்மையாகும். இன்று எல்லோரும் பார்க்கத்தக்கவகையில் இத்திட்டங்களின் பலாபலன்கள் உருக்காலும் சிமெந்தாலும் எழுதப்பட்டுள்ளன.

வெள்ளப் பெருக்குகளும் அதனால் ஏற்படும் அழிவுகளும் இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நீர்ப்பாசனம் படிப்படியாக அபிவிருத்தியடைகிறது. அதோடுகூட இப்பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் ஸ்திரமான கைத்தொழில் வளர்ச்சியும் விருத்தியடைகிறது.

### பிரதேசத் திட்டத்தின் முக்கியத்துவம்

தாமோதர் பள்ளத்தாக்கு அபிவிருத்தி இப்பொழுது ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி மட்டுமல்ல அதற்கு மேலும்அபிவிருத்தியடைந்துள்ளது. அப்பகுதியின் இயற்கை வளங்களாகிய கரி போன்றவைகளை விருத்திசெய்வதிலும் ஈடுபட்டுள்ளது. உண்மையில் இது ஒரு பிரதேச திட்டமாகும்.

இந்தியாவில் சில ஆறுகள் பிரயோசமான அளவு அபிவிருத்தியடைந்துள்ள போதும் அவற்றின் திட்டங்கள் யாவும் தொடர்பானவைகளாக அமையவில்லை. இதனால் இதன் நன்மைகள் தொடர்புபடுத்தப்பட்ட பூரண அம்சத் திட்டத்தினது பலாபலன்களிலும் பார்க்கக் குறைவாகவே உள்ளன. எல்லாவற்றையுப் தொடர்புபடுத்துகிற ஒரு அபிவிருத்தித் திட்டத்தைச் சம்பந்தப்பட்ட அரசுகள் கொண்டுவரின் காவேரி, கிருஷ்ணா, கங்கை ஆகிய ஆறுகளில் பல நன்மைகளைக் கொண்டுவரத் தக்க எண்ணற்ற திட்டங்களை உடு...
கலாம்.

தற்பொழுது பொ...
தார நெருக்கடி கு...
நின்றாலும் அது உ...
யான காரணமல்ல.
லோடும் ஒன்று சே...
இது பற்றி ஆலோ...
செய்யாமையே காரண...
கும், இன்றைய சூழ்நி...
நாம் ஆற்றுப் பள்ளத்...
அபிவிருத்தி எண்ண...
கைவிடலாகாது. ஆ...
பள்ளத்தாக்கின் ஒரு...
தீரணமான திட்டத்...
சிறந்த அதிகாரி ஒ...
அவசியமில்லை, ஆ...
பொதுநலக் கருதி...
திய அரசினதும் மற்ற...
களினதும் உடன்பாடும்...
துழைப்புமே அவசியமா...

### பல அம்ச திட்டங்கள்

சிறியசிறிய திட்டங்...
செயல்படுத்தி பி...
யாவற்றையும் தொ...
படுத்துவதிலும்பார்க்க...
னர் கூறியதுபோல் ...
சேர்ந்த தொடர்பான...
அம்சத் திட்டம் கூடிய...
மையைத்தரவல்லது. ...
மிடுதலிலும் ஆக்க...
களிலும் பலநோக்குத்...
டம் தொடர்பான ...
சேர்ந்த ஆற்றுப் ப...
தாக்கு நீர் அபிவிரு...
திட்டம் ஆகிய இர...
பிரதான இடம்பெறு...
குக் காரணம் இவ்...
ஒன்றுசே...துச் செ...
மூலம் இவைகள் அ...
சிக்கனமேயாகும்.

பொதுவாகக் கூறின்...
வாற்றுப் பள்ளத்தா...
அபிவிருத்தித் திட்ட...
செயல்படின் மக்களின்...
நன்றாகப் பாதுகாக்கப்...
அபிவிருத்தியடைந்த ...
பகுதியும் இதனால் ந...
யடையும்.

### திருப்பம்

வருடாவருடம் ஏற்...
பெருவெள்ளப் பெரு...
ளால் பாதிக்கப்படும்...
மங்கள் யாவும் பா...
கப்படுவதோடு வளமு...
வாகவும் ஆக்கப்படும்,...
பாசன வசதிகள் அ...
படும் கிராமப் புறங்...
கூடிய அபிவிருத்தி ...
காணலாம்.

இவைகாரணமாகக்...
மின்வலு பெறுதலும்...
பொருள்களுக்கு நல்ல...
கியும் சிறந்த போக்...
த்து. வசதியும் இவ...
கூட பாடசாலைகள் ...
தியசாலைகள் போன்ற...
நல நிறுவனங்களும்...
மங்களில் காணக் கூ...
வாகவுள்ளன.

இத் திட்டங்களின்...
நதிகளில் உற்பத்திய...
படும்மின்சாரம்விவசா...
விருத்திக்கு பயன்...
நீர்ப்பாசன இயந்திர...
இயக்கவும் கைத்தொ...
விஸ்தரிக்கவும் பெ...
பயன் படுவதோடு பு...
தப் பாதைகளை ஒளி...
வதற்கும் பயன்படு...
படும். நதிப் போக்குவ...
வசதிகள் நிலையங்...
டையே போக்குவர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தம் இலங்கைக்கும் ...ரும் வர்த்தக உறவு

## எதிர்காலத்தில் இன்னும் அதிகரிக்க வாய்ப்பு

சுதந்திரமடைந்த பின்னர் பாரதமும் இலங்கையும் நெருக்கமானகலாச்சார பொருளாதாரத் தொடர்புகளை பலவருட காலமாக வைத்துக்கொண்டு வந்துள்ளன. இந்த நல்லுறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதில் இருநாடுகளும் அவ்வப்போது முயற்சிகள் எடுத்து வந்துள்ளன. இத்தொடர்புகள் சமீபகாலத்தில் நல்ருதிருப்பத்தையும் வேகத்தையும் அடைந்துள்ளன. இவ நாடுகளும் பொருளாதாரத் துறையிலும் மற்றும் துறைகளிலும் காட்டிவரும் ஊக்கம் நல்லுறை வளர்க்கவும் எதிர்காலத்தில் வர்த்தக பண்டமாற்று விஷயங்களில் மேலும்முன்னேறவும்வாய்ப்பளிக்குமென எதிர்பார்க்கலாம்.

பாரதத்திலிருந்து மீன்மற்றும் மீனைக்கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப்பொருள்கள், பம்பாய் வெங்காயம், மிளகாய், பீடிஇலைகள், மருந்துவகைகள், பருத்திநூல், சணல் பொருள்கள், கரி, உருக் குதண்டவாளங்கள், சிமெந்து மற்றும் உலோகங்களால் செய்யப்பட்ட பொருள்கள் திரைப்படத் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்கள், திரைப்படங்கள் ஆகியன இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் முக்கிய பொருள்கள் கொப்பரூவும், ரப்பரும் எனக் கூறலாம்.

1961-ம் வருடம் ஒக்டோபர் மாதம் கைச்சாத்தான இலங்கை-இந்திய வர்த்தக ஒப்பந்தத்தின் கீழேயே இவை நடைபெறுகின்றன. இந்த ஒப்பந்தம் வருடா வருடம் புதுப்பிக்கப்படுகிறது. இருநாடுகளின் வர்த்தக நல்லுறவுக்கும் வர்த்தக வளர்ச்சிக்கும் இது வகை செய்கிறது. இலங்கைக்கு கருவாடு, புளி, சர்க்கரை ஆகியனவும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன. இலங்கையிலிருந்து தேங்காய்எண்ணை இயற்கை ரப்பர் ஏற்றுமதியாகும்.

இந்திய - இலங்கை வர்த்தக உறவை மேலும் பலப்படுத்தி இருநாடுகளும் நெடுங்காலம் நன்மைபெறக்கூடிய முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### கடன் வசதிகள்

இலங்கை இந்தியாவிலிருந்து தனக்குத் தேவையான பொருள்களை வருவித்துக் கொள்ள இந்தியா இரண்டு கோடி ரூபா கடனை வழங்கியுள்ளது. இந்தக் கடன் உதவியை இலங்கை துணி, கருவாடு, மிளகாய் ஆகியவற்றை வாங்குவதற்குப் பயன்படுத்தியது.

1962-ம் வருடத்திலும் இந்தியா இவ்வித ரீதியில் 5 கோடி ரூபா கடன் வழங்க முன்வந்தது இதற்கான ஒப்பந்தம் 1967-ம் வருடத்திலேயே கைச்சாத்தானது. இது முந்திய ஏற்றுமதி இறக்குமதியிலிருந்து மாறுபட்டதாகவுள்ளது. இதன் மூலம் தொழில் துறைக்குத், தேவையான இயந்திரங்கள், தந்திதொடர்புக்குத் தேவையான இயந்திரங்கள், டெலிபோன்கள், டெலிபிறின்டர்கள், வர்த்தகத்துறைக்குத் தேவையான பொருள்கள் ஆகியன பாரதத்திலிருந்து ஏற்றுமதியாகும். பஸ் செஸிக்களையும் இலங்கை பாரதத்திலிருந்து இறக்குமதி செய்யும்.

இன்றும் இரு நாடுகளுக்கிடையிலான தொழில் துறை கூட்டு ஒத்துழைப்புக்கும் வளர்ச்சிக்கும் எவ்வளவோ வாய்ப்பிருப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. துணிஉற்பத்தி, தோல்துணி, தையல் மெஷின்கள், சைக்கிள்கள், தேயிலை உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள் தயாரித்தல், எயர்கொண்டிஷனர்கள் தயாரிப்பு ஆகியவற்றிலும் பாரதத்துடன் ஒத்துழைக்க இலங்கை அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது. 1968-ம் வருடம் ஜனவரியில் இருநாடுகளின் அமைச்சர்களும் நடத்திய பேச்சுவார்த்தை பொருளாதார ஒத்துழைப்பில் நல்ல நம்பிக்கையைத்தோற்றுவித்துள்ளது.

இலங்கைப் பிரதமரின் சமீபத்திய பாரத விஜயமும் இரு நாடுகளுக்கிடையில் தொழில்துறை, வர்த்தகத் துறை, கூட்டு ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்கும் நல்ல வழிவகுத்துள்ளது.

---

சீர்படுத்துவதோடமையாது மூலப் பொருள்களை பெறுவதற்கும் சந்தைகளை இலகுவாக அடைவதற்கும் பேருதவியளிக்கின்றன.

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தியால் ஏற்படும்சகல பலாபலன்களும் நகரவாசிகள் கிராமவாசிகள் ஆகிய இரு பாலாருக்கும் பெருநன்மையளிப்பதாகவுள்ளன. இவர்களுக்கு இவ்வபிவிருத்தி திட்டங்கள் பொருள்களை உற்பத்தி செய்து பெருக்குவதிலும் வேறுபல அத்தியாவசிய சேவைகளை பெறுவதிலும் பேருதவியளித்துள்ளன,

இரண்டாவதாக இந்த நதிப்பள்ளத்தாக்கு அபிவிருத்திகள் இதோடு தொடர்பற்ற வேறுபல நன்மைபயக்கும் திட்டங்களை உருவாக்கவும் அடிகோலியுள்ளன. சுருங்கக் கூறின்உண்மையில் இவ்வபிவிருத்தித் திட்டம் மக்களின் நலனுக்காக ஒரு தொடர்பான திட்ட இயக்கத்தை அதிகரித்துள்ளதெனலாம். ஆற்றுப்பள்ளத்தாக்கபிவிருத்தியால் சிறந்த தொடர்பேற்படுகிறது.

# சிறுகைத்தொழிலில் பாரதத்தின் முன்னேற்ற

--- கே. எல். நஞ்சப்பா ---
(சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி கமிஷனர்)

சிறு கைத் தொழில் அபிவிருத்தியில் கடந்த 10 அல்லது 12 வருடகாலமாக இந்தியா நல்ல முன்னேற்றமடைந்துள்ளது. ஆரம்பத்தில் எவ்வித உதவியுமில்லாது ஆரம்பிக்கப்பட்ட சிறு கைத்தொழில்கள், இன்று 1,18,500, சிறு கைத்தொழில் நிறுவனங்களாக பல்வேறு, ராஜ்யங்களிலும் வளர்ந்துள்ளன. தற்பொழுது பாவனைப் பொருட்கள் மட்டுமன்றி தயாரிப்பாளருக்குக் தேவையான பொருட்களையும் இவை உற்பத்திசெய்து வருகின்றன.

மின்சாரம், தொழில்நுட்ப பகுதியில், உற்பத்தி பாராட்டக்கூடிய அளவு அதிகரித்துள்ளது. தேமமீட்டர், பேப்பர்ஊசி, கிளிப், கிளாஸ், பிளாஸ்ரர் பலகை, பென்சில் தீட்டும் கருவி, தலைமயிர் கிளிப், சோக், கலர்ப் பெட்டிசிறுபிள்ளைகளுக்கான விளையாட்டு பொருட்கள், வர்ணங்கள் ஆகியவையின் உற்பத்தியில் தேவைகளை பூர்த்திசெய்கிறது.

மின்சார ஸ்திரிக்கை பெட்டி, கம்பிவலை, பிரஸ், ஸ்பிரிங், பேனுக்கள், மூக்குக் கண்ணுடி பிரேம்கள் ஆகியவை 50 வீதத்திற்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன சிறு கைத்தொழில் பகுதி வேலைவழங்குவதிலும், நல்லதொரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. பதிவுசெய்யப்பட்ட தொழிற்சாலை பகுதிகளில் உள்ள முழு இடங்களிலும், 36 சதவீதம் குடிசைக் கைத்தொழில் பகுதியில் வேலை வழங்கப்பட்டுள்ளது. மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் மட்டும் கைத்தொழில் பகுதிகளில் சுமார் 10 லட்சம் பேருக்கு வேலைபெறும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கு... வேறு வழிகளிலும் ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது. மத்திய சிறு கைத்தொழில் ஸ்தாபனம், தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனம் ஆகியவை சிறு கைத்தொழில் அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டிவந்துள்ளன.

சிறு கைத்தொழில் அபிவிருத்தி கமிஷனரின் முக்கிய வேலை, நாடு முழுவதிலும், சிறு கைத்தொழில் சேவை நிலையங்களை ஏற்படுத்துவது தான். தொழில் நுட்பத் துறைகளிலும், நவீன யந்திரங்களையும், உப கரணங்களையும், பாவிக்கும் முறைகளிலும், ஆலோசனை வழங்குவதுதான் இந்த ஸ்தாபனங்களின் வேலையாகும். உற்பத்தியில் நவீன உபகரணங்களையும், முறைகளையும் கையாள்வதுபற்றியும் மூலாதாரப் பொருட்களை தகுந்த முறையில் பாவிப்பதுபற்றி ஆராய்ச்சிகளை நடத்துவதால் ஏற்படும் பயன்களையும், யந்திர வேலைகளினுல் பெறும் முன்னேற்றங்களையும், இந்த நிறுவனங்கள் செயல் முறையில் காட்டி, சிறு கைத்தொழில் பகுதியினரை ஊக்குவிக்கும்.

தொழில்நுட்ப முறைகளிலும், யந்திரப் பகுதிகளிலும், பயிற்சியளிப்பதும், பொருளாதார நிலைமை பற்றி தகவல் தெரிவிப்பதும், சந்தை நிலைபரம்பற்றி தெரிவிப்பதும், புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதும், குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி கமிஷனின் முக்கிய வேலைகளாகும்

இதுவரை இந்த ஸ்தாபனம் 4,50,000 தடவைகளில் தொழில்நுட்ப உதவியளித்திருக்கிறது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 5,00,000 தடவை சிறு கைத்தொழில் நிறுவனங்களுக்கு சமுகமளித்துள்ளனர். இவர்கள் அங்கு தொழில்நுட்ப உதவிகளை அந்தந்த பகுதிகளில் அளித்து வந்திருக்கின்றனர். இந்த ஸ்தாபனம் இதுவரை திட்டங்கள் பற்றிய சுமார் 3,000 படங்களை தயாரித்துள்ளது.

15,000 பேர் யந்திர பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்றிருக்கின்றனர். சுமார் 18,000 பேர், தொழில் நுட்ப துறையில் பயிற்சி பெற்றிருக்கின்றனர். ஹைதரபாத்திலுள்ள சிறு கைத் தொழில் விஸ்தரிப்பு பயிற்சி நிலையத்தினரால், கைத் தொழில் பகுதியிலும், அபிவிருத்தி சம்பந்தமாக பலருக்கு பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது.

சிறு கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக பல விசாரணைகள் நடைபெற்றுள்ளன. இந்த விசாரணைகளின் மூலம், உற்பத்திகளின் தலைமைபற்றியும் அபிவிருத்திபற்றியும், யந்திரங்கள் உபகரணங்கள் பெறுவது சம்பந்தமாகவும், பல்வேறு உற்பத்திபொருட்களின் விலைகள்பற்றியும், பொருட்களின் தரத்தைப் பற்றியும் அறியக்கூடியதாக இருந்தது.

யந்திரங்களை வாடகைக்கு விடும் முறையில். தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனம் நன்கு உதவியளிக்கக் கூடியமுறையில் நடந்துள்ளது. அபிவிருத்தி கமிஷனரின் உதவியுடன் ராஜஸ்தான், மத்தியபிரதேசம், ஒரிஸா ஆந்திரா, கேரளம், ஆகிய பகுதிகளில், சிறுகைத் தொழில், அபிவிருத்திக்கான வழிவகைகள் நல்ல முறையில் செய்யப்பட்டிருக்கின்றன.

தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனம் நடத்திவரும் அபிவிருத்தித்திட்டத்தில் இதுவரை 17,000 பகுதிகள் அடங்கியுள்ளன. சுமார் 21,000 அரசாங்க ஒப்பந்தங்கள், இதுவரை

(8-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

இன்று திகதி என்னவென்று கேட்டால் நீங்கள் கூசாமல் 26-1-69 என்று கூறுவீர்கள்தானே நான் அப்படியில்லை என்கிறேன். இன்று திகதி 11-1-00 என்று நான் கூறினல் உங்களுக்கு ஆச்சரியமாயிருக்குமல்லவா?

திருவள்ளுவர் எப்பொழுது பிறந்தார் என்பது பற்றி பலர் பலவிதமான அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிருர்கள். அவர் கடைச்சங்ககாலத்து புலவர் என்பதை மட்டும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். இக் காலம் கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் வருடங்களுக்கு முன் தொடங்கி கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற்ருண்டுவரை இருந்ததென்று பொதுவாக கருதப்படுகிறது. இந்தக்கால எல்லைக்குள் திருவள்ளுவர் எப்பொழுது பிறந்தார் என்று நிச்சயமாக கூறுவதற்கு போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை. அவர் கிறிஸ்து பிறப்பதற்கு முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் பிறந்திருக்கவேண்டுமென்று இப்பொழுது தமிழகத்து அறிஞர்கள் தீர்மானித்திருக்கிருர்கள். சென்ற தைப்பொங்கல் தினத்தன்று திருவள்ளுவர் ஆண்டு 2000 ஆரப்பமாகியிருக்கிறது.

இதை கொண்டாடுவதற்கு சென்னையில் தடபுடலான ஏற்பாடுகள் பல நடக்கின்றன. சென்றவருடம் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ்விழாவில் சேர்ந்த லட்சக்கணக்கான பணம் இதற்கு செலவிடப்படும். திருவள்ளுவரையும் திருக்குறளையும் பற்றிய நூல்கள், உரைகள் ஆராய்ச்சிகள் யாவும் அடங்கிய ஒரு மணிமண்டபம் சென்னை பட்டினத்தில் நிறுவப்படஇருக்கிறது. வள்ளுவர் விழாவே வருகிற ஆடி மாதத்தில் வெகு ஆடம்பரமாக நடக்கப்போகிறது.

எனவே இப்பொழுது நடப்பது கலியுகவருடம் 5070, சாலிவாகான சகவருடம் 1891, கிறிஸ்து சகாப்தம் 1969, திருவள்ளுவர் ஆண்டு 2000.

திருவள்ளுவர் எந்தமாதத்தில் எத்தனையாம் திகதியில் பிறந்தார் என்றும் ஒருவருக்கும் தெரியாது, சிலர் மாசி மாதம் என்கிருர்கள். சிலர் அப்படியில்லை என்கிருர்கள் இதுவும் சர்ச்சைக்கிடமானது. திருவள்ளுவரோ, அவருக்கு உரை எழுதியவர்களோ அவர் பிறந்த திகதி, இறந்த திகதிகளைப் பற்றி எதுவிதமான குறிப்பும் வைத்துவிட்டுப் போகவில்லை.

பாரதியார் தினத்தை எப்பொழுது கொண்டாட வேண்டுமென்று முன்பு பெரிய சர்ச்சை கிளம்பி பிறகு ஒருவாறு அது தீர்மானிக்கப்பட்டதுபோல திருவள்ளுவர் தினத்தை கொண்டாட வேண்டிய நாளையும் எல்லோருக்கும் திருப்தியளிக்கும் முறையில் தீர்மானிக்கவேண்டும்.

திருவள்ளுவரைக் கேட்டால் அவர் 'நாளேது நட்சத்திரமேது' என்றே சொல்வார் என்று எனக்கு படுகிறது. மருத்துவத்தைப் பற்றி மருந்து என்ற தலைப்பில் ஓர் அத்தியாயம் எழுதியவர் சோதிடத்தைப் பற்றி ஒரு சொல்லாவது எந்த அத்தியாயத்திலாவது கூறவில்லை. ஆனல் ஊழ் என்ற தலைப்பில் ஒரு முழு அத்தியாயத்தை எழுதி 'ஊழிற் பெருவலி யாவுள?'

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரி புதியகமிட்டி நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக்கான புதிய கமிட்டி சுகாதார அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் முதலாம் திகதி முதல் செயல்படும் இக் கமிட்டி 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையான இரண்டு வருட காலத்துக்கு இயங்கும்.

16 பேர் கொண்ட இக் கமிட்டியில் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்:

திரு, எம். வைரமுத்து (தலைவர்) டாக்டர் சி. எம். வன்னியசேகரம், முகாந்திரம், ஈ. பி. இராசையா. திரு எஸ். லோகேஸ்வரன் திரு. ஏ, சிதம்பரப்பிள்ளை, அன்ரன் சி. பொன்னம்பலம், டாக்டர் அ, நடராஜா, திரு. வீ. சுப்பிரமணியம் முதலியார் சி. முத்துத்தம்பி. திருமதி அந்தோனியா சுவாமிநாதர் காதி எம். எம். சுல்தான், திரு. எம். கதிரவேலு, திரு. எஸ். ஆர். கனகநாயகம் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர், வடபகுதி சுகாதார சேவை அதிகாரி, மாவட்ட பொது வேலைப் பகுதி பரிபாலன பொறியியல் நிபுணர்.

இப்புதிய கமிட்டியின் முதாவது கூட்டம் அடுத்த மாதம் 3-ம் திகதி ஆஸ்பத்திரி ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (கா. நி)

## கலவிக்கு நன்கொடை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுசைவப்பாடசாலையை விஸ்தரித்துக் கட்டுவதற்காக காலம் சென்ற தம்பையா முதலியார் சபாரத்தினத்தின் மகன் புலேந்திரன் முல்லைத்தீவு கிராமந்தரக் கோட்டிற்கு முன்பாக உள்ள மூன்று ஏக்கர் நிலத்தை வவுனியா பிரதம கல்வி அதிகாரியிடம் தன்கொடையாகக் கையளித்துள்ளார்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 26—1—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி. 6-35 சைவநற்சிந்தனை-எஸ். இளையதம்பி, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை-வண. சகோதரர் தோமஸ்பெர்ஞன்டோ 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை. மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

6-15 சங்கீத பாராயணம், 6-30பேச்சு, 6-45 பாவளம், 7-00 முத்தி நெறி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்திச்சுருள், 9-45 நாதசுரம்- பி. எஸ். பிச்சையப்பா.

## சுன்னுகம் ச. ச. நிலைய விழா

சுன்னுகம், சனி

சுன்னுகம் வடக்கு சனசமூக நிலையத்தின் ஆண்டு விழா தலைவர் திரு. எஸ். யோகநாதன் தலைமையில் நிகழ்ந்தது. பிரதம விருந்தினராக உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கலந்து கொண்டார். நிர்வாகசபைக்கு நடப்பு வருட உத்தியோகஸ்தர் தெரிவு நிகழ்ந்தது. பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. எஸ். யோகநாதன், உபதலைவர்: திரு. கே. மகாலிங்கம், பொதுக்காரியதரிசி திரு. தா. சிவசம்பு, தனதிகாரியும் நிலையப் பெறுப்பாளரும்' கதாதரன்.

நிர்வாகசபைக்கு 5 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். காரியதரிசிதிரு. தா. சிவசம்பு நன்றி கூறினர்.

## தமிழரசுக்கிளைகள்

அளவெட்டி, சனி

தமிழரசுக்கட்சி தலைமைப் பீடம் தொகுதிவாரியாக கிளைகளை நிறுவ இருக்கிறது. காங்கேசன்துறைப் பகுதியில் இக்கிளைகளை காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நிறுவ இருக்கிருர்.

இம்மாதம் 29-ந் திகதி தமது தொகுதிக்கு விஜயம் செய்யும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன் துறைத் தொகுதியில் உள்ள பல கிராமங்களில் கட்சக்கிளைகளை நிறுவும் முயற்சிகளில ஈடுபடுவார் என்றும் தற்சமயம் இயங்கி வரும் கிளைகளின் நிர்வாகிகளையும் சந்தித்து கிராம அபிவிருத்தி வேலைகள் பற்றியும் ஆராய்வார் என்றும் தெரிகிறது.

இதுபற்றி கிராமப் பிரமுகர்களுக்கு கடித மூலம் தெரிவிக்கப்பட்டுளளது.

# குழப்பமான நிலையில் கூட்டம் ஒத்திவைப்பு

## வரவுசெலவுத் திட்டம்பற்றி எவ்வித முடிவு மில்லை

யாழ்ப்பாணம்ஞாயிறு வரவ செலவு திட்டத்தை அங்கீகரிப்பதற்காக கூடிய சாவகச்சேரி நகரசபையின் மாதாந்தக் கூட்டம் குழப்பமான நிலையில் வரவு செலவு திட்டம்பற்றி எதுவித முடிவும் செய்யப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. சுமார் ஒருமணி நேரம் சபையில் நடந்த சூடான விவாதங்களை தொடர்ந்து குழப்பமான நிலையில் கூட்டத்தை தொடர்ந்து நடத்த முடியாதெனக் கூறிய தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார். சபையின் வெளியில் பொலிசாரும் சுமார் ஒரு மணிநேரம் காத்து நின்றனர்.

திரு. சு. கனகரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. க. மயில்வாகனம் மாதாந்தக் கூட்டத்தை இம்மாதம் 16-ம் திகதி வைத்திருக்க வேண்டுமென்றும் 24-ம் திகதிவைப்பது பிழை என்றும் தெரிவித்தார், இதைத் தொடர்ந்து திரு. மயில்வாகனம் கூட்டத்தில் கொண்டுவந்த ஒரு பிரேரணையை தலைவர் நிராகரித்தார்.

தனது பிரேரணை அனுமதிக்கப்பட்டதால் வாக்குக்கு விடப்பட வேண்டுமென்று திரு மயில்வாகனம் தெரிவித்தார். அப் பிரேரணையில் உள்ள விஷயங்களை தான் ஏற்கனவே நிராகரித்துவிட்டதால் வாக்குக்கு விட வேண்டிய அவசியமில்லையென்றும் அதனுல் பிரேரணையை நிராகரிப்பதாகவும் தலைவர் தெரிவித்தார்.

அங்கத்தவர்கள் மத்தியில் நடந்த சூடான விவாதத்தைத் தொடர்ந்து இரு அங்கத்தவர் சபையைவிட்டு வெளியேறினர்: இதைத் தொடர்ந்து தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

## இன்றைய பலன்

ஞாயிற்றுக்கிழமை

(26-1-69)

தை மாதம், 13 உ

திதி- அட்டமி, காலை 6-45 மேல் நவமி.

நட்சத்திரம்- பரணி இரவு 10-36 மேல் கார்த்திகை.

ராகுகாலம்- 5-06 — 6-36.

சுபநேரம்- 9-36 — 11-06.

இன்று பிறந்தவர்களுக்கு எண்ணியது கிடைக்கும், இறைவன் அருள் உண்டு. எண்ணிய பொருள் எளிதில் கிடைக்கும். கண்ணில் நோய் குஷ்டம் கவலைகள் நீங்கும். செய்தொழில் விருத்தி, சிறப்பும்உண்டு. குருதொழில்புரிவோர்க்கு குதூகலமிகுதியும், வனிதையர் வாழ்வில் வளம் பெறும் ஆண்டாகும்.

மேஷம்- மக்கள் பிணி, மனப்போராட்டம்.

ரிஷிபம்- பேச்சுவன்மை பெரும் புகழ் உண்டு.

மிதுனம்- சூழ்ச்சிமிகுதி சோதனைக்கட்டம்.

கடகம்- மாதுறுவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்வு.

சிம்மம்- இதயப்பூரிப்பு இன்பத்தின் சாயல்.

கன்னி- பகைமூட்டம், பதட்டத்தைத் தவிர்.

துலாம்- இருமனம் கலக்கும், இனிமையும் உண்டு.

விருச்சிகம்- செய்தொழில் தாமதம், சிந்தனைமிகுதி.

தனுசு- குருவிசுவாசம் குறிக்கோள் வெற்றி.

மகரம்- பயணச்செய்தி, பலிதமுண்டு.

கும்பம்- இணையவரும் துணை, எதிர்க்காமல் அணை.

மீனம்- மோதவரும் பகை பந்துக்கள் துயர்.

சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

## இடமாற்றம்

உடும்பராய், சனி

பதுளை ஊவாக் கல்லூரியிலிருந்து திரு. எம். பொன்னுத்துரை ஆசிரியர் ஏழாலை மகாவித்தியாலயத்திற்குஇம் மாதத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஊவாக் கல்லூரியில்'இலக்கிய வெளியீடு' என்ற கல்லூரி வெளியீட்டிற்கும்' உபைந்தாட்டத்திற்கும் பொறுப்பாசிரியராக இவர் இருந்துவந்தார்.

0 0

பண்டத்தரிப்பு, சனி

அவிசாவலை புனித மரியாள் கல்லூரிஆசிரியர்திரு. சாமுவேல் பெனடிக்ற் மாதகல் மேற்கு அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு மாற்றம் பெற்றுள்ளார். இக் லூரியின் ஆசிரியர் நலவிருத்திச்சங்க உபதலைவராகவும் சமூக சேவைச்சங்க காரியதரிசியாகவும், கல்லூரியின் கத்தோலிக்க இளைஞர் இயக்க தலைவராகவும், கல்லூரியின் வருடாந்த வெளியீட்டுக் குழுநிர்வாகியாகவும் தமிழ்ச்சஞ்சிகையின் பதிப்பாசிரியராகவும் இவர்பணி புரிந்துள்ளார்,

0 0

பருத்தித்துறை சனி

மன்னர் சித்திவிநாயகர் வித்தியாலய ஆசிரியர் திரு. தா. சங்கரப்பிள்ளை புலோலி இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

## தேடுவாரற்ற சைக்கிள் கோர்ட்டில்

வல்வெட்டித்துறை, சனி

இம்மாதம் 18-ந் திகதி வல்வை சன சமூக சேவா நிலையத்திற்குப் பக்கத்தில் தேடுவாரற்ற நிலையில் கிடந்த சுமார் ரூபா 300 பெறுமதியான றலி பைசிக்கிள் ஒன்று வல்வெட்டித்துறை பொலிசைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தரான திரு. பி. சுப்பிரமணியத்தினல் கண்டு எடுக்கப்பட்டு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

## மாணவர்-பொலிசார் மோதல்

புதுடில்லி, ஜன. 25

மத்திய பிரதேசத்தில் நேற்று கலெக்டர் காரியாலயத்தின் முன் மாணவர் சிலர் ஆர்ப்பாட்டம் நடத்திய போது மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையில் ஏற்பட்ட கைகலப்பில் பொலிஸ் அதிகாரிகள் சிலரும், கலெக்டரும் மாணவர் சிலரும் காயமடைந்தனர். இப்போது அங்கு ஊர்வலங்கள், கூட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.


பலமற்ற பாட்டரிகளைப் புறக்கணியுங்கள்

எவலைற் பாட்டரிகளை மாட்டுங்கள்




சீ. வி. பாட்

கொழும்பு — கண்டி — யாழ்ப்பாணம்

தயாரிப்பாளர்: மேர்கரி பாட்டரி கம்பனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை, அம்பனை கோஷ்டிகள் சாம்பியனாகின

அளவெட்டி, சனி

குடும்பசிட்டி உதயதாரகை மன்றத்தின் 11-வது ஆண்டு விழாவையொட்டி யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக் கிடையே நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஏழாலை ஐக்கிய விளையாட்டுச் சங்கம் சம்பியனாகியது.

ஒருமாதமாக நடைபெற்று வந்த இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

1-ம் பிரிவில் ஏ தொகுதியில் தெரிவுசெய்யப்பட்ட தெல்லிப்பளை விளையாட்டுக் கழகமும் 'பி' தொகுதியில் தெரிவுசெய்யப்பட்ட ஏழாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதின.

இப்போட்டியின்இறுதியில் ஏழாலை கோஷ்டியினர் 3-2 கோல்களால் எதிர்க் கோஷ்டியை வென்று இவ்வருடம் முதலாம் பிரிவுச் சாம்பியன் சின்னத்தைப் பெற்றுக் கொண்டனர். இப் போட்டிக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு. கே. கிருஷ்ணர் மத்தியஸ்தம் வகித்தார்.

2-ம் பிரிவித் தொகுதியில் தெரிவான அம்பனை சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், 'பி' தொகுதியில் தெரிவான குடும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகமும் மோதிய போது அம்பனைவெற்றிபெற்றது. இப்போட்டியில் அம்பனைக் கோஷ்டி 4-0 கோலால் வென்று 2-ம் பிரிவுச் சாம்பியன் சின்னத்தைப் பெற்றுக்கொண்டது. இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## சவாரிப்போட்டி முடிவுகள்

சுழிபுரம், சனி

பண்டத்தரிப்பு இளைஞர் மன்றத்தினரால் பொங்கல் தினத்தன்று நடாத்தப்பட்ட தனி மாட்டு சவாரிப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம்வருமாறு: க. சுப்பிரமணியம், மா. தங்கராசா, கி. கந்தசாமி. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பண்டத்தரிப்பு பட்டின சபை உறுப்பினர் திரு. வி. நவரட்ணசிங்கம் பரிசில்களை வழங்கினார்.

## விளையாட்டுக்கழக உறுப்பினர்

அளவெட்டி. சனி

தையிட்டி ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் எஸ். ஸ்ரீகாந்தன். உபதலைவர் ரி. சபாரத்தினம். காரியதரிசி எஸ். ஞானரத்தினம், தனாதிகாரி எஸ். நவரத்தினம், விளையாட்டுத்தலைவர் எஸ். கந்தசாமி, உதைபந்தாட்ட தலைவர் எஸ். செல்வரத்தினம், கைப்பந்தாட்டம் முதலாம்பிரிவு தலைவர் எஸ்.நாகரத்தினம்.2-ம் பிரிவு தலைவர் ஈ. பாலசிங்கம், கணக்கு பரிசோதகர் ரி. கந்தவனம். கிரிக்கெட் பகுதி தலைவர் எம். சறத். நிர்வாகசபை உறுப்பினராக எஸ். தேவரத்தினம், எஸ். கந்தையா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஸ்ரீமுருகன் வெற்றி

சாவகச்சேரி, சனி

சாவகச்சேரி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்திற்கும் உசன் இராமநாதன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே மட்டுவில் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டியை தென்மராட்சி விளையாட்டுச்சங்கம் நடாத்தியது.

## குடத்தனை வெற்றி

உடுப்பிட்டி, சனி

குடத்தனை பானு உயத விளையாட்டுக் கழகத்துக்கும் வலிக்கண்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடந்த கரபந்தாட்டப்போட்டியில் பானு உதய விளையாட்டுக்கழகம் 2-1 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

உதைபந்தாட்டம்

## உரும்பராய் வெற்றி

உரும்பராய், சனி

விளையாட்டுக்கழகங்களின் ஆதரவின் கீழ் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் 'ஏ' பிரிவு விளையாட்டுக் கழகமும் காரைநகர் 'ஏ' பிரிவு விளையாட்டுக்கழகமும் நேற்று மோதிக்கொண்டன.

உரும்பராய் பட்டின சபைத் தலைவர் திரு. பத்மராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட இவ் விளையாட்டுப் போட்டியில் இரு கோஷ்டிகளும் விட்டுக் கொடுக்காமல் திறமையாக விளையாடிக்கொண்டிருந்தனர். இரு கோஷ்டிகளும் இடைவேளைவரை மாறி மாறி 2-2 கோல்கள் போட்டிருந்தனர்.

இடைவேளையின் பின் நடைபெற்ற ஆட்டத்தில் சிறிதுநேரம்வரை கோல் ஒரு பக்கமும் போகாமல் இருந்தது. ஆட்டம் முடிய 15 நிமிடங்கள் இருக்கும் பொழுது காரைநகர் கோஷ்டி மேலும் ஒருகோலை எதிர்க்கோஷ்டிக்குள் மிகவும் நுட்பமாகத் தள்ளியது. தோல்வியுறும் நிலையிலிருந்த உரும்பராய்க் கோஷ்டி மேலும் உத்வேகம்பெற்று விளையாடத்தொடங்கியதும் ஆட்டம் முடிய 5 நிமிடங்கள் இருக்கும்பொழுது உரும்பராய் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு 4-3 என்ற நிலையில் காரைநகரை வெற்றி பெற்றது.

உரும்பராய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. சி. பரமேஸ்வரன் மத்தியஸ்தம்வகித்தார்.

## உலோக தொழிற்சாலை கோஷ்டி வென்றது

உரும்பராய், சனி

யாழ். உலோகத்தொழிற்சாலைக்கோஷ்டிக்கும், யாழ். சென் பீற்றர்ஸ் கோஷ்டிக்குமிடையே சிநேகிதபூர்வமாக நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். உலோகத் தொழிற்சாலைக் கோஷ்டி 1-0 கோலால் வெற்றி பெற்றது.

யாழ்.வைத்தீஸ்வரா விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. சண்முகலிங்கம் மத்தியஸ்தராகவிருந்தார்.

# பல்வைத்திய நிபுணர்களை நேரடியாக சந்திக்கலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நோயாளர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து சிகிச்சையளிப்பதற்கு பல்வைத்திய நிபுணர்களுக்கு அரசாங்கம் அனுமதி அளித்திருப்பதாக தெரியவருகிறது.

கடந்த மூன்று வருடங்களாக பல்வைத்தியர்கள் தனிப்பட்ட முறையில், சிகிச்சையளிக்கும் முறை நிறுத்தப்பட்டிருந்தது. பல்வைத்திய நிபுணர்கள் மற்றவைத்திய நிபுணர்களைப் போல் தாங்களும்' தனிப்பட்ட முறையில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க அனுமதிவழங்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரியிருந்தனர்.

பல்வைத்திய சிகிச்சையில், பயிற்சிபெற்ற டாக்டர்களுக்கு ஏற்கனவே இந்த சலுகை வழங்கப்பட்டிருந்த போதிலும், நேரடியாக பல்வைத்திய நிபுணர்களாக பட்டம் பெற்றவர்களுக்கு இதுவரை காலமும் இச் சலுகை வழங்கப்படாமலிருந்தது.

இனிமேல் பல்நோயாளிகள், தங்கள் டாக்டர் மூலம் பல்வைத்திய நிபுணர்களை அழைத்து சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியுமாம்.

## சரியானநேரத்தில் தேர்தல்

கொழும்பு, சனி

''அடுத்த பொதுத் தேர்தல் சரியானநேரத்தில் நடக்கும்'' என்ற பதிலை மட்டுமே இது பற்றிக் கேட்பவர்களிடம் பிரதமர் டட்லி சேனநாயக்கா சொல்லிக்கொண்டிருக்கின்றார்.

தேர்தலுக்கான திகதியை பிரதமர் நிச்சயித்துவிட்டதாகவும், அதை மிக இரகசியமாகவே பிரதமர் வைத்திருப்பதாகவும் அரசியற அவதானிகள் கருதுகின்றனர்.

## 100 பேர் காணி பெற்றனர்

பூநகரி, சனி

பூநகரி-மன்னார் வீதியில் இரண்டு ஏக்கர் குடியேற்றக் காணி கொடுப்பதற்கான காணிக்கச்சேரியொன்று பூநகரிகாரியாதிகாரி எம். இராசரத்தினத்தால் நடத்தப்பட்டது. உதற்கு 250 க்கு மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர். எனினும் 100 பேர் மட்டுமே தெரியப்பட்டனர். இவர்களுக்கு வீடு கிணறு முதலியன கட்ட அரசாங்கம் பணம் வழங்குமெனத் தெரியவருகின்றது.

## திறக்க முடியவில்லை

சுழிபுரம், சனி

பண்ணாகம் உப தபால் கந்தோருக்கு புதிய இரும்புப் பெட்டி வந்து சேர்ந்து வாரம் ஒன்றுக்கு மேலாகியும் பெட்டியைத் திறக்கும் சாவி இதுவரை வந்து சேரவில்லையாம்.


அது நல்லது
அது இதமானது




அதுவே
ஸ்போர்ட்ஸ்மன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிலமற்றேருக்கு நிலமும் வீடும் வழங்குக'

பருத்தித்துறை, சனி

''வடமராட்சிப் பகுதியிலுள்ள நிலமற்ற சகல மக்களுக்கும் நிலமும் வசிக்க வீடுகளும் வழங்கப்பட வேண்டியது அவசியம். நாட்டின் பொருளாதார வளத்துக்கும் விருத்திக்கும் உழைக்கும் மக்களுக்கு நிரந்தர வசிப்பிடம் அவசியம்

இவ்வாறு அண்மையில் பருத்தித்துறைக்கு விஜயம் செய்யவிருக்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர், பிரேமதாசாவைக் கோடும் மகஜர் ஒன்று வடமராட்சி மக்கள் சார்பில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

மேலும் வடமராட்சிப் பகுதியில் குறைந்தது மூன்று விளையாட்டு மைதானங்களாவது தேவையென்றும், கல்வி வளர்ச்சி மட்டுமின்றி உடல் வளர்ச்சியும் குழந்தைகளுக்குத் தேவையென்றும் மகஜர் வற்புறுத்துகிறது. மேலும் இப்பகுதியில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத பகுதிக்கு மின்சாரம் தேவையென்றும் ஆங்காங்குத் தலை தூக்கிவரும் கைத்தொழில்களுக்கும் மக்களின் நல்வாழ்வுக்கும் மின்சார வசதிகள் ஒரு வரப்பிரசாதமாகுமென்றும் இதுவரை கலைக்கப்பட்டு இருக்கும் நெல்லியடிப் பட்டினசபையையும் கட்டைவேலிக் கிராமசபையையும் மீண்டும் விரைவில் கூட்ட வேண்டுமென்று மகஜர் கோருகிறது.

மேலும் நெல்லியடிப் பட்டினசபைக் காரியாலயத்தை மத்திய கேந்திர நிலையத்துக்கு மாற்றுமாறும் மகஜர் கோரியுள்ளது.

## புத்தாண்டு தின விளையாட்டு

பருத்தித்துறை, சனி

அடுத்த புத்தாண்டுத் தினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் பெருமளவில் ஒரு விளையாட்டுப்போட்டி நடாத்துவதற்கான ஒழுங்குகளை வடமராட்சிப் பகுதிக்காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் மேற்கொண்டுள்ளார்.

## அண்ணுவுக்கு . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் அவர் பூரண குணமடையவேண்டுமென்பதில் தம்முடன் பொதுமக்களும் சேர்ந்து வாழ்த்துவார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## ந ட்டிலும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அந்த அத்தியாயத்தை முடிக்கிருர். ஆகையால் அவர் ஒரு கர்மவாதி என்பது தெளிவாகிறது. ஊழ்வினையை மாற்றமுடியாதென்பது அவருடைய முடிவு.

யோகர்சுவாமிகள் கூறுவது போல 'எல்லாம் எப்பொழுதோ முடிந்த விஷயம்'.

—வழிப்போக்கன்

## 581 கண்கள் த னம்

கொழும்பு, சனி

இலங்கை-கண் நன்கொடைச் சங்கத்துக்கு 581 கண்கள் இதுவரை தானம் செய்யப் பட்டுள்ளனவாம். இத் தகவலை கண் நன்கொடைச் சங்கக் காரியதரிசி திரு. வில்சன் சிறிவர்த்தன தெரிவித்தார்,

## 29-ம திகதி தீர்ப்பு

குரும்பசிட்டி, சனி

கடந்த வருடம் ஜூலை மாதம் 20 ம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் வைத்து காங்கேசன் துறையைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தையா என்பவருக்கு பலாத்காரம் விளைத்து பயமுறுத்தியதாக சுன்ஞகத்தைச் சேர்ந்த ரி. சிவலிங்கம், மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவர்களான கந்தையா, வல்லிபுரம் ஆகிய மூவர் மீது காங்கேசன்துறைப் பொலிஸால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் நேற்று விசாரணை செய்யப்பட்டது.

ஆறுமுகம் கந்தையா, நடுவிலான் ஆறுமுகம், சார்ஜன்ட் ஜி.வடிவேலு ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்குவதுஇம்மாதம் 29-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிரி தரப்பில் எதிரிகள் மூவரும் சாட்சியமளித்தனர். எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு. இ. சுந்தரலிங்கம், புறக்டர் உலகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். பொலிஸ் தரப்பில் புரக்டர் ஏ. அன்ரனி ஆஜரானர்.

## சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள்

உடுப்பிட்டி, சனி

மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் முன்னேற்றத்திற்குக் கிராமங்களே பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் கருதுகின்றனர்.

மலேரியாத் தடுப்பு இயக்கத் தொழிலாளர்களில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த இளைஞர்களும் பணி புரிவதாகவும் இவர்களை கிராம மக்கள் பலர் தங்கள் வீடுகளுக்குள் நுழைந்து டி. டி. ரீ.தெளிப்பதைத் தடுப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது.

சுகாதாரப் பகுதியினருக்கு இப்பிரச்சினை பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதாம். இவ் வியக்கம் பொதுப்பணி என்றும்' இதில் இன பேதம் காட்ட வேண்டாமென்றும் சுகாதார அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருக்கேதீச்வரத்தில்

## வாலிபர் சிரமதானம்

இமையாணன், சனி

திருக்கேதீச்வரம் கோவிலைச் சுற்றியுள்ள காடுகள் சிரமதான இயக்கத்தின் மூலம் வெட்டித் திருத்தப் படுகின்றன. எதிர்வரும் மகா சிவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு நடைபெறும் இச் சிரமதான இயக்கத்தில் சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான வாலிபர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## ஆண்டு விழா

சண்டிலிப்பாய், சனி

சண்டிலிப்பாய் இந்து வாலிபர் சங்கத்தின் 5-வது ஆண்டு நிறைவுவிழா கடந்த வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய் ஆலங்குளாய் முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, ச.கா சபாநாதன் ஆகியோரின் பேச்சுக்களும் இடம் பெற்றன.

## தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வர்

அளவெட்டி. சனி

சுன்ஞகம் ஊர்வல வழக்கில் அபராதம் விதிக்கப்பட்ட எதிரிகள் மூவரும் தமக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யவுள்ளனர்.

இவ்வழக்கில் எதிரிகளான திரு. சுப்பிரமணியம், திரு. வி. ஏ. கந்தசாமி, திரு. கே. கணபதிப்பிள்ளை என அழைக்கப்படும் சூடாமணி ஆகியோருக்கு மல்லாகம் நீதிபதி எம். சண்முகலிங்கம் அபராதம் விதித்திருந்தது தெரிந்ததே.

இவர்கள்மூவரும்புறக்டர் ஏ. அன்ரனி மூலம் உயர் நீதிமன்றத்தில் இத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யவிருக்கின்றனர்.

## முழங்காவில் குடியேற்றம்

பூநகரி,சனி,

பூநகரியிலுள்ள முழங்காவில் குடியேற்றத்திட்டத்தையும், கரியாலை நாகபடுவான் குடியேற்றத்திட்டத்தையும் நேரில் பார்வையிட்டு அங்கு நிலவும் குறைகளை அறிவதற்காக உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். சிறீகாந்தா. யாழ். அரசாங்க அதிபர் திரு. பீட்டர்ஸ், உதவி அரசாங்கஅதிபர்திரு.ரி.முருகேசம்பிள்ளை ஆகியோருக்கு குடியேற்றத் திட்ட வாசிகளால் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதியில்லாமல் காணிகள் வரண்டுவிட்டதால் நீர்ப்பாசன வசதி செய்துதருமாறும் தங்களுக்குத் தரும் மாதஉதவிப்பணத்தை 6 மாதம் நீடிக்குமாறும் இவர்கள் கேட்டுக் கொண்டனர்.

பூநகரி பல்வராயன் கட்டு உபதபாற் கந்தோருக்கு தொலைபேசி வசதி செய்து தருமாறும் குடியேற்றவாசிகள் கேட்டுக் கொண்டனர்,

நிரந்தரக் காரியதரிசி சிறீகாந்தா பேசும் போதுதான் குடியேற்ற வாசிகளின் கஷ்டத்தை உண்மையிலேயே உணர்வதாகவும், இவற்றை நீக்க தான் ஆவன செய்வதாகவும், மழைபெய்தால் சிறு போகத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்து தருவதாகவும் குறிப்பிட்டார்.

முழங்காவிலில்வாடிவீடொன்று அமைப்பதற்கான அத்திவாரக்கல்லை அரசாங்க அதிபர் பீட்டர்ஸ் நாட்டினர்.

## ஆத்மீக . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது. இந்த இரு உபகாரங்களுக்காகவும் நாம் இந்தியாவுக்குப் பெரிதும் நன்றியுடையவர்களாவோம்.

பாரதம், இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான உறவு மிகப்பழமையானது. அசோகனது மகன் மகிந்தன் இலங்கைக்குவந்த நாளிலிருந்து இருநாடுகளும் சினேகபூர்வமாகவே இருக்கின்றன. இலங்கையோ இந்தியாவோ எந்தச் சந்தர்ப்பத்திலும் ஜனநாயக வழியிலிருந்து விலகமாட்டா என்றும் நம்புகிறேன்.

வாழ்க்கையை முன்னேற்றிச்செல்ல விஞ்ஞானம், கைத்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சி அவசியமென்றும், அதற்காக ஆத்மீக நெறிக்கு தடைகளோ கட்டுப்பாடுகளோ இருக்கக்கூடாதென்றும் தார்மீக சம்பந்தமான இப்பொருட்காட்சி ஆத்மீகநெறிவளர்க்கும்மடத்தில் ஆரம்பமாவது நல்ல சூசகமென்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதற்குமுன்னர் இந்திய ஹைகமிஷனர் திரு. கண்டேவியா, இந்திய வர்த்தக [illegible] னர்.

## சீதனம் கிடைக்காததால் வாலிபர் தற்கொலை முயற்சி?

புலோலி, சனி

பருத்தித்துறையைச் சேர்ந்த நவரத்தினம் (வயது 22) சந்திரகுமார் (வயது 18) ஆகிய இருவரும். டீ. டீ. ரி. க்கு தெளிக்கும் நச்சு மருந்தைக் குடித்து உயிருக்கு ஆபத்தான நிலையில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

நவரத்தினம் என்பவர் தனக்கு பேசிய சீதனத்தை அவருடைய மனைவி வீட்டார் கொடுக்காது ஏமாற்றியதால் நச்சு மருந்தை குடித்து தற்கொலை செய்ய எத்தனித்தாகக் கூறப்படுகிறது,

இவரின் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்ததாகக் கூறப்படும் சந்திரகுமார் என்பவருக்கும் நவரத்தினத்துக்கும் ஏற்கனவே சீதன விஷயத்தால் வாக்கு வாதம் ஏற்பட்டதாம். இந்த வாக்கு வாதத்தால் சீதனம் கிடைக்காததைத் தொடர்ந்து நவரத்தினம் நஞ்சு மருந்தைக் குடித்தாராம். இதைஅறிந்து பக்கத்து வீட்டு சந்திரகுமாரும் நஞ்சு மருந்தை தானும் குடித்தாராம். இருவரும் மயக்க முற்ற நிலையில் இப்போது மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## மின்சாரக் கம்பிகள் களவு

அளவெட்டி, சனி

வீதியில் மின்சாரக் கம்பங்களுடன் இணைக்கப்பட்டிருந்த ஆயிரம் ரூபாய் பெறுமதியான மின்சாரக் கம்பிகளை இனந்தெரியாதவர்கள் களவாடி விட்டனராம்.

தெல்லிப்பளை கிராமசபைக்கு சொந்தமான கீரிமலை-காங்கேசன்துறை வீதியிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

தெல்லிப்பளை கிராமசபையினர் இதுசம்பந்தமாக காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்ததை அடுத்து காங்கேசன்துறை பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர், இதுவரை எவரும் கைதாகவில்லை.

## சிறுகைத்தொழிலில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டங்கள் மூலம் பெறப்பட்டுள்ளன.

சிறு கைத்தொழில் அபிவிருத்தித்திட்டங்களில், மற்றெரு முக்கியமான திட்டம் கைத்தொழில் பேட்டைகளை உருவாக்குவதாகும். இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம் சிறு கைத்தொழிலுக்கு ஏற்ற தொழிற்சாலைகள் அமைப்பதற்கான வசதிகளை அங்கு செய்து கொடுப்பதாகும், தகுதியான இடத்தில், தண்ணிர் மின்சாரம், போக்குவரத்து, வங்கி, தபாற்கந்தோர், போசனசாலை, ஆகியவையும், சாதாரணமாக தேவைப்படும் வசதிகளும் இத்திட்டத்தின் மூலம் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. 66-ம்ஆண்டுசெப்டம்பர் மாத முடிவிற்குள் 483 கைத்தொழில் பேட்டைகள், 6,839 பிரிவுகளுடன் அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. இக்கைத்தொழில் பேட்டைகளில் 4,000 சிறு கைத்தொழில் பிரிவுகள் அமைந்துள்ளன. சுமார் 62,000 தொழிலாளர்களுக்கு, இக்கைத் தொழில் பேட்டைகளில் வேலைவழங்கப்பட்டிருக்கிறது.

கிராமப்பகுதிகளை கைத்தொழில் பகுதிகளாக மாற்றியமைக்கும் வேலையில் குடிசைக் கைத்தொழில் ஸ்தாபன அபிவிருத்திக் கமிஷனர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். கிராமப் பகுதிகளில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளும் செய்து வருகின்றனர்.

பயிற்சியளிக்கும் உத்தியோகத்தர்கள் வான்களில் அடிக்கடி பல்வேறு கிராமப் பகுதிகளுக்கும் சென்று அப்பகுதிமக்கள், பல்வேறு யந்திரசாதனங்களையும் பாவிப்பதற்கான முறைகளை தெரிவித்து வருகின்றனர்.

சிறு கைத்தொழில் பொருட்கள் ஏற்றுமதிசெய்வதில், குடிசைக் கைத்தொழில் ஸ்தாபனங்கள் பெரும் முயற்சிகளை எடுத்து உதவி செய்து வருகின்றன. இந்த ஸ்தாபன உத்தியோகத்தர்கள், சிறு கைத்தொழில் நிறுவன பொருள்களைப் பெற்று அவற்றை ஏற்றுமதி செய்து விலைமதித்து, பணஉதவியளித்து தேவையான வசதிகளையெல்லாம் செய்து வருகின்றன. சிறு கைத்தொழில் பகுதியில் உள்ள ஏற்றுமதி சம்பந்தப்பட்ட விஷயத்தில் உதவிபெறுகின்றனர். குறிப்பாக பொருட்களை கட்டுவதிலும், உதவி பெறுகின்றனர். சிறு கைத்தொழில் அபிவிருத்தியில் ராஜ்ய அரசாங்கங்களும், முக்கிய பங்கு கொண்டுள்ளன. பணஉதவியளிப்பதும், திட்டங்களுக்கு உதவியளிப்பதும் ராஜ்ய அரசாங்கங்களின்பங்காகும். அத்துடன் மூலாதாரப் பொருட்களையும் மின்சார வசதியையும், போக்குவரத்து வசதியையும், ராஜ்ய அரசாங்கங்கள் செய்து கொடுக்கின்றன. கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்வதிலும் கைத்தொழில் பகுதிகளை முன்னேற்றுவதிலும் மூலாதாரப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதிலும், ராஜ்ய அரசாங்கங்கள் பங்கு கொண்டுள்ளன.

இந்தியாவில் சிறு கைத்தொழில் பகுதி இன்று முக்கிய இடம்பெற்றுள்ளது. பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் இச் சிறு தொழில்கள் மிகவும் உதவிபுரிந்து வருகின்றன. அத்துடன் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்கும் இது வழிகோலுகிறது. பாரதத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு தொழில்திறமை மிக்கவர்களின் திறமையை வெளிப்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நல்லதொரு வாழ்வை மக்களுக்குத் தேடிக்கொடுப்பதற்கும், இச்சிறுகைத் தொழில்கள் நன்கு உதவுகின்றன,

## மரண விசாரணை அதிகாரிநியமனம்

அளவெட்டி, சனி

மல்லாகம் கோவிற்பற்று புதிய திடீர் மரணவிசாரணை அதிகாரியாக திரு. இ. பாலசுப்பிரமணியம் நியமனம் பெற்றுள்ளார்.

மல்லாகம்கோவிற்பற்றில் மரணவிசாரணை அதிகாரியாக்க் கடமையாற்றிய திரு தாமோதரம்பிள்ளை மல்லாகம் கிராமசபைத்தலைவராக தெரிவு செய்யப்பட்டதனல் இந்த இடம் காலியானது.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் [illegible] ஜனவரி மாதம் 26-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org